காலையில் எழுந்ததிலிருந்தே உடம்பெல்லாம் ஒரே வலி. போதாததற்கு அந்த ஒற்றைத் தலைவலியும் சேர்ந்து கொண்டு கல்யாணியைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தது. கணவன் சந்துருவின் உதவியுடன் மாமியார், மற்றும் குழந்தைக்கான, காலைக்கடன்களை முடித்து, காபி, பலகாரத்துடன் மதிய உணவையும்



சிறுகதைத் திருவிழா



## தார்சி எஸ். பெர்னாண்டோ

தயார் செய்துவிட்டு நிமிரும்போதே... மணி எட்டரை ஆகியிருந்தது. மாமியார் காலையிலேயே எழுந்து குளித்துவிட்டு, பூஜை அறைக்குள் நுழைந்துவிட்டால், வெளியே வர ஒன்பது மணியாகிவிடும். வழக்கமாய் கல்யாணி ஆபீசுக்குப் புறப்படும் நேரத்தில்தான் மாமியாரின் கணநேர தரிசனம் கிடைக்கும். அவரால் வேறு எந்த உதவியும் இல்லை என்றாலும், குழந்தையை நாள் முழுவதும் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதே பெரும் ஆறுதல் தான்.

அரக்கப் பரக்க குளித்து, உடை மாற்றிக் கொண்டு, அவசரக் கோலத்தில் இரண்டு இட்லியை விண்டு வாயில் போட்டுவிட்டு, தான் புறப்படுவதைப் பார்த்து அழ ஆரம்பிக்கிற குழந்தைக்கு போக்குக் காட்டி ஏமாற்றி, டாடா காட்டிக் கொண்டே ஓடிப் போய், வாசலில் காத்திருக்கும் சந்துருவின் பைக்கில் லாகவமாய் ஏறி அமர்ந்து, கடுமையாய் வலிக்கும் தன் நெற்றியை இதமாய்த் தடவிவிட்டவாறே, அந்த மண்டையைப் பிளக்கும் வெயிலில் ஆபீஸ் வந்து சேர்கிறாள் கல்யாணி!



# மனமாற்றம்

## கொறிக்க...

முன்னாள் தேர்தல் ஆணையர் டி.என்.சேஷன் சாப்பாடு விஷயத்தில் படு ஸ்ட்ரிக்ட். இப்போது கூட பூண்டு, வெங்காயம், மசாலாப் பொருட்களைச் சேர்த்திருந்தால், அந்த உணவைத் தொடக் கூட மாட்டார்.



வழக்கம் போலவே ஆபீஸுக்கு மட்டம் போட்டுவிட்ட தோழி ரஞ்சனியின் வேலையும் அவள் மீதே விழுந்து விடுகிறது. தலைவலி காரணமாக, பெர்மிஷனில் நேரத்தோடேயே சென்றுவிட நினைத்திருந்த அவள் எண்ணத்தில் மண் விழ, தன் விதியை நொந்துகொண்டு வேலையைத் தொடர்கிறாள் கல்யாணி. தலைக்கு மேலிருந்த வேலைப்பளுவின் தீவிரத்தில் உடல் உபாதை சுத்தமாய் மறைந்து போய்விடுகிறது. என்றாலும், அந்தத் தலைவலி மட்டும் தீராமல், அவள் தன் நெற்றியில் இட்டிருக்கின்ற கரும் பொட்டினருகே, தொடர் துயராக நிலைத்து நின்றுவிடுகிறது. போய் விட்ட மின்சாரம் வந்து வந்து, போய் கண்ணாமூச்சி ஆடுகிறது. அத்துடன் கோடை வெப்பத்தின் கொடூரமும் சேர்ந்துகொள்ள, வியர்வையில் தெப்பமாய் நனைந்து போகிறாள். கசகசக்கும் இந்த ஆடைகளை மாற்றிவிட்டு, படுக்கையில் விழுந்து ஒரு குட்டித் தூக்கம் போட்டால்தான் சரியாகும் இந்தத் தலைவலி. ஆனால், இப்போதைக்கு அது சாத்தியமில்லை.

ஒரு வழியாக ஆபீஸ் வேலை முடிந்துவிடுகிறது. வீட்டிற்குச் செல்ல அழைத்துப்போக தினமும் வந்துவிடும் சந்துருவின் வருகைக்காகக் காத்திருக்கிறாள். தொலைபேசி ஒலிக்கிறது. சந்துருதான். அவனுடைய ஆபீஸில் ஆடிட் வேலையை அன்றைக்கே முடிக்க வேண்டியிருப்பதால் தன்னால் வந்து அவளை வீட்டிற்குக் கூட்டிப் போக இயலவில்லை எனும் அவனுடைய வருத்தமான செய்தி, அவள் தலைவலியை இன்னும் அதிகமாக்கிவிடுகிறது.

பஸ்ஸில் வீடு திரும்ப வேண்டிய கட்டாயம். கூட்ட நெரிசலில், அடித்துப் பிடித்துக்கொண்டு ஏறுகையில், வயதானவர் ஒருவர் கையில் வைத்திருந்த குடையில் நீட்டிக் கொண்டிருந்த கம்பிமுனை கையில் கிழித்துவிட, அந்த வேதனையையும் தாங்கிக் கொண்டு, இடிபாடுகளில், நசுங்கி, பிசுங்கி பயணித்து, சோர்வுடன் பஸ்ஸை விட்டு இறங்கி வீடுவந்து சேர்கிறாள்.

உள்ளே நுழைந்ததும், தலையைப் பிடித்துக்கொண்டு, சோபாவில் அக்கடா என்று சாய்கிறாள் கல்யாணி.

''என்னம்மா வந்துட்டியா? உன்னையத்தான் பார்த்துட்டிருந்தேன். வர்ற வழில காய்கறி எல்லாம் வாங்கிட்டு வந்துட்ட இல்ல? நாளைக்குவேற காய்கறி மார்க்கெட் எல்லாம் ஸ்டிரைக்குன்னு பேசிக்கிறாங்க. என்னோட மாத்திரையும் வாங்கிட்டேயில்ல?''

மாமியாரின் யதார்த்தமான கேள்வி கல்யாணியின் செவியில் இப்போது நாராசமாகத் தெறித்து விழுகிறது. எழுகின்ற கோபத்தை அடக்கிக் கொள்கிறாள்.

''காலையிலிருந்தே, எனக்கு சரியான தலைவலி, உங்களுக்குத் தெரியும்தானே? இவருவேற, இன்னைக்குப் போயி என்னைய ஆபீஸிலிருந்து கூட்டிட்டுப் போக வராம, பஸ்லயே போயிடுன்னுட்டாரு. பஸ்லயோ கூட்டம்னா கூட்டம். நெருக்கித் தள்ளிட்டாங்க. அதோட இந்த மண்டைக் குடைச்சல் வேற. வீட்டுக்கு வந்து சேர்ந்தா போதும்னு ஆகிப்போச்சு எனக்கு. அதனால எதையுமே வாங்கிட்டு வர முடியல!''.

அவளுடைய பதிலைக் கேட்டு, மாமியாரின் முகம்போன போக்கைப் பார்த்ததும், கல்யாணியின் ரத்த அழுத்தம் மேலும் கீழும் எகிற ஆரம்பிக்கிறது.

'ஆபீஸுக்குப் போகும் போதே தலைவலியோட போனாளே. பாவம். நாள் முழுவதும் கஷ்டப்பட்டு உழைச்சிட்டு களைப்பா, அதுவும் பஸ்சுல இடிபட்டு வந்து சேர்ந்திருக்காளே; நாம நாள் முழுவதும் ஊட்டுல சும்மாதான உட்கார்ந்திருக்கோம்; அவள் தலைவலிக்கு இதமா, ஒரு காபி போட்டுக் கொடுப்பமேன்னு தோணுதா இந்தப் பொம்பளைக்கு? இதுல, காய்கறி வாங்கிட்டு வரலேன்னு குறைவேற!'.

வேகமாய் வந்து புகுந்துவிட்ட இக்கடுங்கோபம் அவள் மனதில் உரிமையுடன் ஊஞ்சல் கட்டி சாய்ந்தாட, மிகுந்த எரிச்சலுடன் நிமிர்கிறாள் கல்யாணி. இதுவரை பக்கத்து வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த அவளுடைய குழந்தை, அவளை நோக்கி ஓடி வருவது தெரிகிறது.

''ஹை! அம்மா வந்தாச்சு! அம்மா




**இளமை, புதுமை**
**எதிலும் முதன்மை**

நிறுவிய ஆசிரியர்
எஸ்.ஏ.பி.

கௌரவ பதிப்பாளர்
பி.வி. பார்த்தசாரதி

கௌரவ ஆசிரியர்
டாக்டர். எஸ்.ஏ.பி. ஜவஹர் பழனியப்பன்

பதிப்பாளர், ஆசிரியர்
ராவ்

பொறுப்பாசிரியர்கள்
ப்ரியா கல்யாணராமன்
கிருஷ்ணா டாவின்ஸி
ரஞ்சன்

துணை ஆசிரியர்கள்
இரா. மணிகண்டன்
லேனா தமிழ்வாணன்

உதவி ஆசிரியர்கள்
பெ. கருணாகரன்
சுதிர், கே.என். சிவராமன்

அச்சிட்டவர்
ராவ்

தலைமை நிருபர்
திருவேங்கிமலை சரவணன்

உதவி தலைமை நிருபர்கள்
வி. சந்திரசேகரன், ஏ.ஆர். குமார்,

நிருபர் குழு
ரவிசங்கர், ஆனந்த்

குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், பழைய எண்.151 புதிய எண்.306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.



கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. பிரசுரமாகும் கதை, கட்டுரை மற்றும் படைப்புகள் அனைத்திற்கும் பதிப்பாளரே உரிமையாளராவார். மறுபிரசுரம் செய்யவோ, மற்ற வேறு வகைகளில் பயன்படுத்தவோ பதிப்பாளரின் முன் அனுமதி பெற்றே செய்ய வேண்டும்.



கதை, கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி : தபால் பெட்டி எண் : 2302, சென்னை 600 031.

ஃபேக்ஸ் எண் : 26425041
தொலைபேசி எண் : 26422148
இ-மெயில் : kumudam@vsnl.com

வந்தாச்சு!" ஆசையாய்க் குரல் கொடுத்துக் கொண்டு ஓடிவந்து, சோபாவில் பாய்ந்து ஏறி, அவள்மேல் தொப்பென்று விழுகிறது அவள் குழந்தை. கையில் எதையோ மறைத்து வைத்துக் கொண்டு.

வயதுக்கு மீறிய வளர்ச்சியுடன், புஷ்டியாய் இருக்கும் குழந்தை தன் மேல் தடால் என்று விழுந்ததால், சுண்டி இழுக்கின்ற ஒரு பெரும் வலி தன் கால்களிலிருந்து முதுகு வரை பாய்ந்து பரவ, துடித்துப் போகிறாள் கல்யாணி.

"எழுந்திருசனியனே, மனுஷி உடம்பெல்லாம் புண்ணா நோவுது. நீ வேற மேல விழுந்து என் உயிரை எடுக்கறியே!'' ஏற்கெனவே வெறுப்பில் இருந்த கல்யாணி வார்த்தைகளை நெருப்பில் தோய்த்து வீசி எறிகிறாள். சட்டென்று எழுந்து, குழந்தையைத் தள்ளி விட்டு விட்டு, குளியலறைக்குள் வேகமாய் நுழைந்து தாளிட்டுக் கொள்கிறாள். விக்கித்துப் போய் நிற்கிறது குழந்தை. மருமகளுடைய புதிய வார்ப்பின் பரிமாணம் புரியாமல், திகைத்து நிற்கிறாள் மாமியார்.

ஜில்லென்று தண்ணீர் முகத்தில் பட்டதும் சற்று ஆறுதலாயிருக்கிறது. கை ; கால் அலம்பிக் கொண்டு வெளியே வருகிறாள் கல்யாணி. உடையை மாற்றிவிட்டு, படுக்கையில் சற்றே சாய்ந்து ஓய்வெடுக்கலாம் என்று நினைக்கையில், ஏதோ ஒரு நினைவு நெஞ்சில் சற்றே நிழலாட, அந்தத் தாய்மையின் நெருடலில், அறையை விட்டு மெல்ல வெளியே வருகிறாள். குழந்தையைத் தேடி அவள் கண்கள் அலைபாய்கின்றன.

அதுவரை மூலையில், சோகமாய் நின்றிருந்த குழந்தை, தாயைக் கண்டதும் மீண்டும் ஓடி வந்து அவளுடைய கால்களைக் கட்டிக் கொள்கிறது.

"அம்மா, பாட்டி ஒரு முட்டாய் வாங்கித் தந்தாம்மா. அதுல பாதிய நா தின்னுட்டு, மீதிய ஒனக்கும் பசிக்குமேன்னு வச்சிருந்தம்மா. அதக் குடுக்கத்தாம்மா அப்போது ஓடி வந்தேன். இந்தா; தின்னும்மா. நா உம்மேல விழுந்தது, இன்னும் வலிக்குதாம்மா?'' பாதி பயத்துடனும், மீதி அதனையும் தாண்டிய பாசத்துடிப்புடனும், தட்டுத்தடுமாறி சொல்லி முடிக்கிறது குழந்தை.

# இந்த வாரச் சிரிப்பு



பேபி: ஏ. அரிஷா
அப்பா: எஸ். ஆனந்த்
அம்மா: ஏ. திரா

தெய்வத்தின் குரலாய் ஒலித்த அந்தப் பாசச் சிதறல்கள் தேனாய்த் தன் காதில் பாய, குழந்தை ஊட்டி விட்ட மிட்டாய்த் துண்டு, தன் வாயில் முற்றாய்க் கரைந்துவிடும் முன்னரே, தாய்ப்பாசத்தையும் மிஞ்சி விட்ட, அந்த சேய்ப்பாசத்தின் தாக்கத்தில் சுத்தமாய் கரைந்து போய் விடுகிறாள் கல்யாணி. காலையிலிருந்து அவளை சோகப்படுத்திக் கொண்டிருந்த அந்தத் தலைவலி, இப்போது மாயமாய் மறைந்து போய்விடுகிறது.

ஏதோ ஒரு பெரும் உத்வேகமும், புத்துணர்ச்சியும் தன் உடம்பு முழுவதும் மின் பாய்ச்சலாய்ப் பரவ ஆரம்பிக்க, குனிந்து,குழந்தையை அள்ளி எடுத்து, அணைத்து, முத்தமிட்டு, இடுப்பில் ஏற்றிக் கொள்கிற கல்யாணி, அடுக்களைக்குள் வேகமாய் நுழைகிறாள்.

பத்து நிமிடத்தில், அடுப்படியிலிருந்து வெளியில் வரும் அவள் கைகளில், இரண்டு கோப்பை ஆவி பறக்கும் காபி இருக்கிறது. ஒன்றை தனக்காக மேஜை மீது வைத்து விட்டு, உள்நோக்கி உற்சாகமாகக் குரல் கொடுக்கிறாள்.

''அத்த, ஒரு நிமிஷம் இங்க வாங்க! வந்து இந்த காபியைக் குடிச்சிட்டு உங்க பேரனோட விளையாடிக்கிட்டிருங்க. நொடியில, ராத்திரி சமையல முடிச்சிட்டு நானும் உங்களோட வந்து சேர்ந்துக்கிறேன். காய்கறியையும், உங்க மாத்திரையையும் அவர் வரும்போது வாங்கிட்டு வந்திடச் சொல்லிடறேன்!".

மருமகளின் கனிவான குரல் கேட்டு எழுந்து வரும் மாமியாரும், மிகுந்த மகிழ்ச்சியுடன், பேரப் பிள்ளையை அள்ளிக் கொள்கிறாள்.

அந்த மழலைச் செல்வம், அனைவரின் இதயங்களிலும் ஏற்படுத்திவிட்ட நிறைவான மன மாற்றத்தில், அந்த வீடு மீண்டும் களைகட்டத் தொடங்கிவிடுகிறது! ■






குமுதம் ஜோதிடம்
11.6.2004
விலை ரூ. 5.00



அந்திலி நரசிம்மனும் அஞ்சனை மைந்தனும்!
குடமுழுக்கு காணவிருக்கும் புராதன திருக்கோயில்



ஏ.எம்.ஆரின் சிறப்புக் கட்டுரை